Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 51 | உள்ளூர் - 20.02.2026 | வெள்ளி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 54 | * Issue 51 | வெளியூர் - 21.02.2026 | சனி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**தேர்வு இல்லாமல் இந்திய கடற்படையில் வேலை..!**

**ராகுவின் சஞ்சாரம்..! இவர்களுக்கு டபுள் அதிர்ஷ்டம்!**

**அதிரடியாக மாறும் ரூல்ஸ்..!! மார்ச்-1-ல் அமல்..!!**

**இனி நகைக்கடன் தள்ளுபடி கிடையாது..?**

## இஸ்ரேல் செல்கிறார் மோடி; கையெழுத்தானது ராணுவ ஒப்பந்தம்!



ஜெருசலேம், பிப். 20–

பிரதமர் நரேந்திர மோடி, வரும் 25ம் தேதி இஸ்ரேல் செல்ல உள்ள நிலையில், இந்தியா – இஸ்ரேல் இடையே ராணுவ ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மேற்காசிய நாடான இஸ்ரேல் – இந்தியா இடையே நீண்ட கால நட்புறவு உள்ளது. இந்நிலையில், பிரதமர் மோடி இரண்டு நாள் பயணமாக, 25ம் தேதி இஸ்ரேல் செல்கிறார். அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்து, பிராந்திய மற்றும் இருதரப்பு முக்கிய விவகாரங்கள் குறித்து விரிவாக பேச உள்ளார். மேலும், இஸ்ரேலில் உள்ள இந்திய சமூகத்தினரையும் சந்திக்கிறார்.

இந்த பயணத்தை ஒட்டி இஸ்ரேலில் நடந்த நிகழ்ச்சியில், இரு நாடுகளுக்கு இடையே ராணுவம் சார்ந்த பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இது குறித்து இஸ்ரேல் ராணுவ அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை: இஸ்ரேல் ராணுவ அமைச்சகத்தின் சர்வதேச ராணுவ ஒத்துழைப்பு இயக்குநரகம், இந்திய ராணுவ உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் இந்திய ராணுவ அமைச்சகம் இணைந்து, இரு நாட்டு ராணுவ நிறுவனங்கள் இடையே கருத்தரங்கு மற்றும் நேரடி சந்திப்புகளை சமீபத்தில் நடத்தின.

இஸ்ரேல் மற்றும் இந்திய ராணுவத்தில் உள்ள சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களை ஒன்றிணைத்து, இந்தியாவின் ராணுவ தொழில்துறை அமைப்பு மற்றும் ராணுவ கொள்முதல் நடைமுறை குறித்து பரஸ்பரம் அறிந்துகொள்ள செய்வதே இந்த நிகழ்வின் நோக்கம்.

இந்த நிகழ்வில், 30 இந்திய மற்றும் 26 இஸ்ரேல் ராணுவ நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இதில், நெருக்கடியான காலங்களில் தோள் கொடுத்து துணைநின்ற இரு ராணுவ தொழில்துறைகள் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். இரு நாடுகளுக்கிடையே துறை சார்ந்த பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## துரைமுருகன் இருக்கையில் அமர்ந்த அன்பில் மகேஷ்..! சட்டசபையில் பரபரப்பு!

சென்னை, பிப். 20–

தமிழக சட்டசபையில் கடந்த 17–ந் தேதி இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அடுத்த 2 நாட்கள் பட்ஜெட் மீதான விவாதம் நடந்து முடிந்தது. இன்றைய கூட்டத்தில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுவின் பதில் உரை இடம்பெற்றது.

அதன்பிறகு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார். ஏற்கனவே, உடல்நலக் குறைவால் அவை முன்னவரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் ஓய்வு எடுத்துவரும் நிலையில், அவர் அவைக்கு வரவில்லை.

இந்த நிலையில், காலியாக இருந்த துரைமுருகன் இருக்கையில் இன்று காலை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசிக் கொண்டிருந்தபோது, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பின் மகேஷ் வந்து அமர்ந்தார். அவருக்கு அடுத்ததாக துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேருவும் உட்கார்ந்து இருந்தனர்.

பொதுவாக, முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை தொடர்ந்து, அமைச்சர்கள் வரிசையில் மூத்த அமைச்சர்கள் முதலில் இருப்பார்கள். ஆனால், பின் வரிசையில் உள்ள அமைச்சர் ஒருவர் முன்வரிசையில் வந்து அமர்ந்தது சட்டசபையில் பரபரப்பாக பேசப்பட்டது.

துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், அமைச்சர் அன்பில் மகேஷும் பள்ளி கால நண்பர்கள். அதனால், அடிக்கடி உதயநிதி அருகே வந்து அன்பில் மகேஷ் அமர்வார். எனவே, அது போலத்தான் இன்றைக்கும் உதயநிதி அருகே காலியாக இருந்த அமைச்சர் துரைமுருகன் இருக்கையில் வந்து அவர் அமர்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.



## வேட்பாளர்களுக்கு உதவ ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளை களமிறக்குகிறது தவெக! விஜய் அறிவிப்பு...!!




சென்னை, பிப். 20–

தமிழ்நாட்டில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளதால், தேர்தலில் போட்டியிட உள்ள வேட்பாளர்களுக்கு உதவும் விதமாக ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை தன்னார்வலர்களாக நியமிக்க நிர்வாகிகளுக்கு தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார்

இதுகுறித்து விஜய் வெளியிட்ட அறிக்கையில், "தமிழக வெற்றிக் கழகம் முதன்முறையாக சட்டமன்ற தேர்தலில் சந்திக்க உள்ளது. வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிகள் விரைவில் தொடங்க உள்ள நிலையில், வேட்பாளர்களுக்கு உதவும் வகையில் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களை, நிர்வாகிகள் தன்னார்வலராக நியமிக்க வேண்டும். ஒரு தொகுதிக்கு குறைந்தபட்சம் 2 தன்னார்வலர்கள் நியமிக்கப்பட வேண்டும். இதற்கான வேலைகளில் மாவட்ட நிர்வாகிகள் உடனே ஈடுபட வேண்டும்" என விஜய் தெரிவித்துள்ளார்.

## முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் ஓ. பன்னீர்செல்வம் சந்திப்பு!



சென்னை, பிப். 20–

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவடையும் நிலையில், சட்டப்பேரவை வளாகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்தார் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம். தேர்தல் தொடர்பாக எந்த முடிவும் எடுக்காத நிலையில் சட்டப்பேரவை வளாகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் ஓ.பன்னீர் செல்வம் சந்திப்பு நடந்தது. அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில், ஓ.பி.எஸ்.–இன் அடுத்தக்கட்ட நகர்வுகள் பற்றி தெளிவற்ற சூழல் நிலவும் நிலையில், இருவரின் சந்திப்பு தமிழக அரசியல் களத்தில் ஏற்பட போகும் மாற்றத்திற்கான முன்னோட்டமாக இருக்குமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்த தவறவில்லை.

## காரைக்குடியில் சீமான் போட்டி!



சென்னை, பிப். 20–

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், வரும் சட்டசபை தேர்தலில், காரைக்குடி தொகுதியில் போட்டியிட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தமிழக சட்டசபை தேர்தலுக்கான பணிகளை அனைத்து கட்சிகளும் தீவிரப்படுத்தி உள்ளன. நாம் தமிழர் கட்சி ஆரம்பித்த 2010ம் ஆண்டு முதல், அனைத்து தேர்தல்களிலும் அக்கட்சி தனித்து போட்டியிடுகிறது. வரும் சட்டசபை தேர்தலிலும் தனித்து போட்டியிடுவதாக அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார். இந்நிலையில், அக்கட்சியின் 234 வேட்பாளர்களையும், வரும் 21ம் தேதி திருச்சியில் நடக்கும் மாநாட்டில் சீமான் அறிவிக்க உள்ளார். வேட்பாளர்கள் தேர்வு, 100 சதவீதம் முடிந்த நிலையில், சீமான், அவர் பிறந்த சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி தொகுதியில் போட்டியிட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

### திராவிட மாடல் 2.0 ஆட்சி

# 2 மாதத்தில் மீண்டும் ஆட்சிக்கு வருவோம்!

### சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் உறுதி...!



சென்னை, பிப். 20–

அடுத்த 2 மாதத்தில் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என உறுதிபட தமிழக சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் இபிஎஸ் உள்பட அனைத்த உறுப்பினர்களும் நன்றி தெரிவித்தார்.

தற்போதைய திமுக அரசின் ஆட்சி காலம் முடிவடைய உள்ள நிலையில், இன்றைய நாள் சட்டபேரவையின் கடைசி நாளாகும். அடுத்த பேரவை, புதிய அரசு அமைந்த பிறகே கூடும. இந்த நிலையில், இன்று இடைக்கால பட்ஜெட் தொடர்பான விவாதங்களுக்கு துறை சார்ந்த அமைச்சர்களான தங்கம் தென்னரசு எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பதில் அளித்து பேசினார்.

இதையடுத்து முதல்வர் ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது, இவ்வாண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை, வேளாண் இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சிறப்பான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ளோம் என்றவர், அடுத்த 2 மாதங்களில் இன்னும் வேகமாக வந்து பணியை தொடர்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார். 2021 தேர்தலில் வெற்றி பெற்றபோது மகிழ்ச்சியோடு கவலையாக இருந்தது. மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் ஆட்சி நடத்த முடியுமா? என்ற கவலை இருந்தது. நமக்கு சிறிதும் ஒத்துழைக்காத ஓரவஞ்சனை காட்டும் மத்திய அரசு. நிதிநிலை சீராக இல்லாத நிலையிலும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி உள்ளோம். * கடந்த 5 ஆண்டுகளில் எனக்கும், எனது மனசாட்சிக்கும் மட்டுமே கட்டுப்பட்டு உழைத்தேன்.

எனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பை சிறப்பாக கையாண்டிருக்கிறேன். எனக்கும், ஆளுநருக்கும் தனிப்பட்ட முறையில் எந்த முரணும் கிடையாது என்றவர், வரலாற்று சிறப்புமிக்க இந்த இருக்கையில் எனக்கு முன் இருந்த பலரும் இன்று இல்லாவிட்டாலும் அவர்கள் அனைவரும் போற்றப்படக்கூடியவர்கள். பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை, எதையும் தாங்கும் வல்லமை, கடமை தவறாமை ஆகிய பண்புகளை நானும் கடைபிடித்திருக்கிறேன் என்று கூறியவர், 5 ஆண்டுகள் ஆட்சி குறித்த மனநிறைவோடு நான் உங்கள் முன்னால் நிற்கிறேன் என்றார்.

தொடர்ந்து பேசியவர், தமிழகத்தின் சுயமரியாதைக்கு இழுக்கு வந்தால் அதனை எதிர்க்கும் முதல் நபராக நான் இருப்பேன் என்று கூறியதுடன், தமிழகத்தின் 234 தொகுதிகளையும் எனது தொகுதிகளாக பாவித்து பணியாற்றி வருகிறேன். வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என்ற பாகுபாடும் இன்றி பணியாற்றி இருக்கிறேன்.

எங்கள் சாதனைகளை நாங்களே மிஞ்சும் அளவுக்கு திராவிட மாடல் 2.0 ஆட்சி இருக்கும். உறுதியாக மீண்டும் வென்று ஆட்சிக்கு வந்து, தமிழ் மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவோம் என பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

அவை கண்ணியத்தை கடைபிடித்து குறைகளை சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சி தலைவர் இ.பி.எஸ்–க்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவிப்பதாக கூறியவர், ஆளுங்கட்சி எதிர்கட்சி என்றில்லாமல் என் மீது எப்போதும் அன்பு காட்டும் உறுப்பினர்களுக்கு நன்றி. எதிர்கட்சி தலைவர் இன்று வரவில்லை என்றாலும், இ.பி.எஸ்., உட்பட அனைத்து கட்சி தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்ததுடன், என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய கொளத்தூர் தொகுதி மக்களுக்கு நன்றி. மிகப்பெரிய வாய்ப்பு தந்த தமிழ்நாடு மக்களுக்கு நன்றி என சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஸ்டாலின் உரியாற்றினார். தமிழ்நாட்டை இன்னும் வலிமையாக்கும் நம்பிக்கையை பெற்றுள்ளோம். மீண்டும் ஆட்சிக்கு வந்து திட்டங்களை தொடர்வோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பிப்ரவரி 21-ந்தேதி மதுரை பயணமாகிறார் முதல்வர் ஸ்டாலின்... நிகழ்ச்சிகள் விவரம்...!

சென்னை, பிப். 20–

முதலமைச்சர் ஸ்டாலின் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வகையில், நாளை (பிப்ரவரி 21ந்தேதி) மதுரை பயணமாகிறார். அவரை வரவேற்க திமுகவினர் பலத்த ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நாளை (பிப்.21) மதுரைக்கு பயணம் செய்ய உள்ள நிலையில், அங்கு பல்வேறு அரசு வளர்ச்சி திட்டங்களை திறந்து வைத்து, நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். அதுதொடர்பான விவரங்கள் வெளியாகி உள்ளது.

முதல்வர் காலை 9.30 மணிக்கு சென்னையிலிருந்து சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு, காலை 10.10 மணிக்கு மதுரை விமான நிலையம் வருகிறார். அங்கிருந்து காரில் வடயமஞ்சியில் அமைந்துள்ள எல்காட் தொழில்நுட்பப் பூங்காவுக்கு செல்கிறார். அப்போது சாலையின் இருமங்கிலும் திமுக மற்றும் கூட்டணி கட்சியினர் வரவேற்கின்றனர்.

தொடர்ந்து, காலை 11.35 மணிக்கு அங்கு அமைக்கப்பட்டுள்ள பின்னாகிள் நிறுவனத்தின் திறன் மேம்பாட்டு மையக் கட்டடத்தை திறந்து வைக்கிறார்.

இதையடுத்து, பகல் 12.25 மணிக்கு தமுக்கம் நெல்பேட்டை அண்ணா சிலை வரை 1.1 கி.மீ. தொலைவில் ரூ.190.4 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உயர்நிலைப் பாலம் திறந்து வைக்கப்படுகிறது.



அதனைத் தொடர்ந்து சிவகங்கையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மருது சகோதரர்கள் உருவச் சிலைகளை காணொலி வாயிலாக திறந்து வைக்கிறார்.

அதையடுத்து, பகல் 12.40 மணிக்கு மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கல்லூரியில் மேம்படுத்தப்பட்ட கணினி ஆய்வகத்தை தொடங்கி வைக்கிறார்.

பிறகு வண்டியூர் பகுதிக்கு சென்று, பகல் 1.05 மணிக்கு வண்டியூர் கண்மாய் பூங்கா, அங்குரன் அறிவியல் மையம், பேரூராட்சிகளின் புதிய அலுவலகக் கட்டடம் மற்றும் 867 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

மாலை 4 மணிக்கு மதுரை உத்தங்குடியில் நடைபெறும் திமுக தென் மண்டல வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகிறார். அதனைத் தொடர்ந்து காந்தி நினைவு அருங்காட்சியகம்வில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இரவு 7.30 மணிக்கு சிறப்பு விமானம் மூலம் சென்னை திரும்புகிறார்.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 20.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 08-ம் தேதி

# தங்கம் விலை தாறுமாறா ஏறப் போகுது: ஈரான் மீது போர்!




அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் எப்போதுமே ஏழாம் பொருத்தம் தான். அவ்வப்போது இரு நாடுகளும் வார்த்தை மோதல்களில் ஈடுபடும், நிலைமை சற்றே தீவிரமடையும் பின்னர் தணிந்துவிடும். ஆனால் இந்த முறை அமெரிக்காவின் நடவடிக்கை ஈரான் மீது பயங்கர தாக்குதல் நடத்த அடித்தளமாக அமைந்துள்ளது. ஈரான் மீது முழுமையாக தாக்குதல் நடத்தும் வகையிலான ராணுவ நடவடிக்கைகளை அமெரிக்கா கையில் எடுத்திருப்பது தான் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஈரானுடன் அமெரிக்கா அணுசக்தி உவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. செவ்வாய் கிழமை நட்ந்த பேச்சுவார்த்தையில் பெரிய உடன்பாடு எட்டப்படவில்லை. இதற்கு மத்தியில் அமெரிக்க அரசாங்கம் தங்களுடைய போர்க்கப்பல்களையும் போர் விமானங்களையும் ஈரானை நோக்கி அனுப்பி வைத்திருக்கிறது.

இத்தகைய சூழலில் ஹீரோ நியூஸ் இணையதளம் வெளியிட்டுள்ள செய்தியில் டிரம்ப் அனுமதி கொடுத்தால் போதும் சனிக்கிழமையிலிருந்து ஈரான் மீது போர் தொடுப்பதற்கு அமெரிக்க ராணுவம் தயாராக இருக்கிறது என செய்தி வெளியிட்டு இருக்கிறது. அமெரிக்க பாதுகாப்பு துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் டொனால்ட் ட்ரம்பிடம் போர் தொடுப்பதற்கான அனைத்தும் தயாராக இருக்கின்றது, சனிக்கிழமை முதல் தாக்குதல் நடத்தலாம் என தெரிவித்திருப்பதாக அந்த செய்தி குறிப்பிடுகிறது.

இதனை அடுத்து ஈரான் மீது தாக்குதல் நடத்துவது குறித்து டிரம்ப் தான் இறுதி முடிவு எடுக்க இருக்கிறார். தன்னுடைய மூத்த ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகு டிரம்ப் ஈரான் மீதான தாக்குதல் தொடர்பான அறிவிப்பை அதிகாரப்பூர்வமாக வெளியிடுவார் என சொல்லப்படுகிறது. இல்லை என்றால் இரவோடு இரவாக தாக்குதல் நடத்தி பின்னர் அதிகாரப்பூர்வமாக வெளியிடலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் மீது தற்போது ராணுவ தாக்குதல் நடத்தினால் அதனால் அந்த பிராந்தியத்தில் என்ன மாதிரியான பிரச்சனைகள் நேரிடும், எந்த மாதிரியான எதிர் தாக்குதல்களை எதிர்கொள்ள நேரிடும், உலக பொருளாதார மற்றும் உலக வர்த்தகம் ஆகியவற்றில் என்னென்ன தாக்கம் ஏற்படும் என்பன உள்ளிட்டவை குறித்து வெள்ளை மாளிகை அதிகாரிகள் தற்போது ஆய்வு செய்து வருகிறார்கள். முன்னதாக ஈரான் அமெரிக்காவோடு ஒப்பந்தம் மேற்கொள்ளாவிட்டால் தாக்குதல் நடத்துவோம் என பகிரங்கமாகவே எச்சரிக்கை விடுத்திருந்தார் டிரம்ப். இந்த நிலையில் அமெரிக்க அதிபர் ஆலோசகர்களுள் ஒருவர் ஆக்ஸியாஸ் தளத்திற்கு அளித்துள்ள பேட்டியில் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்பு 90 சதவீதம் அதிகரித்து இருப்பதாக கூறி இருக்கிறார்.

ஈரான் மீது அமெரிக்கா சராசரியாக ஒரு வாரம் வரை தாக்குதல் நடத்தக்கூடும் என்றும் , இஸ்ரேலும் அமெரிக்காவோடு இணைந்து ஈரான் மீது தாக்குதலை நடத்தும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஈரானுக்கு அருகே போர் கப்பல், விமான தாங்கி போர்க்கப்பலையும் நிலை நிறுத்தி இருக்கிறது. ஒரு வேளை டிரம்ப் உத்தரவிட்டு ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால். உலகளவில் பெரிய பதற்றமே உண்டாகும். ஈரானும் பதில் தாக்குதல் நடத்த கூடும் என்பதால் சனிக்கிழமை முதல் அடுத்தடுத்த பதற்றங்களுக்கு பஞ்சமிருக்காது. ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுக்க தயாரகிறது என்ற தகவல் வெளியான உடனேயே தங்கம் , வெள்ளி விலைகள் உயர தொடங்கிவிட்டன. நாளையும் தங்கம், வெள்ளி விலை தாறுமாறாக உயர வாய்ப்புள்ளது. சனிக்கிழமை முதல் தாக்குதல் தொடங்கினால் அடுத்த வாரம் முதல் தங்கம் விலை தாறுமாறாக உயர்வதை யாராலும் தடுக்க முடியாது.

ஏற்கனவே தங்கம் , வெள்ளி ஆகிய இரண்டுமே வரலாற்று உச்சபட்ச விலையை எட்டி தற்போது தான் குறைந்துவருகின்றன. சென்னையில் ஆபரண தங்கம் ஒரு சவரன் 1.33 லட்சத்தையும் வெள்ளி ஒரு கிலோ 4.2 லட்சத்தையும் எட்டின. தற்போது இரண்டுமே விலை குறைந்த நிலையில் ஈரான் போர் பதற்றம் மீண்டும் இந்த விலைக்கு இவற்றை இட்டு செல்ல வாய்ப்புள்ளது. இன்று தங்கம் விலை ஒரு சவரன் 1.16 லட்சத்திற்கும், வெள்ளி ஒரு கிலோ 2.7 லட்சத்திற்கும் விற்பனை செய்யப்படுகிறது. புவிசார் மோதல்கள் ஏற்படும் போதெல்லாம் உலக முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடான தங்கம், வெள்ளியில் தான் பணத்தை போடுவார்கள். இதனால் தான் ஈரான் பதற்றம் தங்கம், வெள்ளி விலையை நிச்சயம் உயர்த்தும். எப்போது விலை உயரலாம் என காத்திருந்த தங்கத்திற்கு இது நல்ல வாய்ப்பாக அமைந்துவிட்டது.



நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம் சித்தாலந்தூர் ஊராட்சியில் 19.2.2026 அன்று செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# டெட் தேர்வு 2026: அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு முக்கிய அறிவிப்பு!




சென்னை, பிப். 20–

ஆசிரியர் தேர்வு வாரியம், அரசுப் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு டெட் தேர்வு 2026 அறிவிப்பை வெளியிடப்பட்டுள்ளது. பிப்ரவரி 18 ஆம் தேதி முதல் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் விண்ணப்பித்து வருகின்றனர். இந்த நேரத்தில் ஒரு முக்கிய அறிவிப்பு அரசு ஆசிரியர்களுக்கு வெளியாகியுள்ளது.

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அறிவிக்கையின்படி (எண். 01/2026), தற்போது அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) – 2026 நடைபெற உள்ளது. இதற்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும் போது 'பணிச்சான்றிதழ்' பதிவேற்றம் செய்வது கட்டாயமாகும்.

**விண்ணப்பிக்கும் முறை**

ஆசிரியர்கள் தங்களது பணிச்சான்றிதழைப் பெற, உரிய ஆவணங்களுடன் அந்தந்த வட்டாரக் கல்வி அலுவலரிடம் (BEO) விண்ணப்பிக்க வேண்டும். ஒரு ஆசிரியர் இரண்டு தேர்வுகளுக்கும் (TET Paper 1 மற்றும் TET Paper 2) விண்ணப்பிப்பவராக இருந்தால், தனித்தனியாக விண்ணப்பக் கருத்துருக்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**தேவையான ஆவணங்களின் பட்டியல்;**

பணிச்சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கும் போது கீழ்க்கண்ட நகல்களை இணைக்க வேண்டும்:

1. முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு வட்டாரக் கல்வி அலுவலர் கையொப்பத்துடன் கூடிய Annexure 1 (இரண்டு நகல்கள்).
2. சம்பந்தப்பட்ட ஆசிரியரின் விண்ணப்பக் கடிதம்.
3. பணி நியமன ஆணை நகல்.
4. பணிப்பதிவேட்டின் (Service Register) முதல் பக்க நகல்.
5. முதன்முதலில் நியமனம் செய்த பதவியில் பணிவரன்முறை (Probation) செய்யப்பட்ட ஆணை நகல் அல்லது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பக்க நகல்.
6. தற்போதைய பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணை நகல் அல்லது பணிப்பதிவேடு பக்க நகல்.
7. TET தாள் 1 / TET தாள் 2–க்கு உரிய கல்வித் தகுதிச் சான்று நகல்கள்.
8. துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை / குற்றவியல் நடவடிக்கை / அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவை குறித்துச் சான்று

**முக்கிய தகவல்**

ஆசிரியர்கள் இந்த ஆவணங்களைச் சரியாகச் சமர்ப்பித்து, வட்டாரக் கல்வி அலுவலரிடம் பணிச்சான்றிதழைப் பெற்று, அதன் பின்பே TET தேர்விற்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியும். அதாவது, ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) ஆன்லைனில் விண்ணப்பிக்க வழங்கியுள்ள கடைசி தேதிக்குள் இந்தப் பணிச்சான்றிதழைப் பெற்று பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**டெட் தேர்வு ஏன்?**

அரசு பணியில் உள்ள ஆசிரியர்கள் டெட் தேர்வில் தகுதிப் பெற்றிருக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தேர்வு எழுத விரும்பாதவர்கள் கட்டாய ஓய்வு பெறலாம். ஓய்வு பெற ஐந்து ஆண்டுகள் உள்ளவர்கள் டெட் தேர்வு எழுத தேவையில்லை. இந்த உத்தரவைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு டெட் தேர்வு நடத்தப்பட உள்ளது. இதற்கான அறிவிப்பை ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) பிப்ரவரி 13 ஆம் தேதி வெளியிட்டது.

**டெட் தேர்வு 2026 எப்போது?**

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக அரசு / அரசு உதவிபெறும் / தனியார் பள்ளிகளில் தற்போது பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கான தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு (தாள்–I மற்றும் தாள்–II) நடத்தப்படுகிறது. இந்த தேர்வு ஜூலை 4 மற்றும் 5ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. இந்த தேர்வுக்கு ஆன்லைன் மூலம் ஏப்ரல் 10 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். மேலும், விண்ணப்பத்தில் ஏதேனும் பிழைகள் இருந்தால் ஏப்ரல் 11 முதல் ஏப்ரல் 13ஆம் தேதி வரை பிழைத் திருத்தம் மேற்கொள்ளலாம்.

**யார் விண்ணப்பிக்கலாம்?**

1. 01.09.2025க்கு முன்னர் ஆசிரியர்களாக நியமனம் செய்து பணிபுரிந்து வருபவர்கள் விண்ணப்பிக்கலாம். முழு நேர ஆசிரியர்கள் மட்டுமின்றி, பகுதி நேர ஆசிரியர்கள், தொகுப்பூதியம் பெறும் ஆசிரியர்களும் இந்த டெட் தேர்வை எழுதலாம்.
2. இரண்டு தாள்களாக நடக்கும் இந்த தேர்விற்கு, முதல் தாளை இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், தொடக்கக் கல்வி பள்ளி தலைமை ஆசிரியர்கள் எழுதலாம்.
3. இரண்டாம் தாளை பிடி ஆசிரியர்கள், நடுநிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் நிகரான பதவியில் உள்ள ஆசிரியர்கள் எழுதலாம்.
4. trb.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.
5. விண்ணப்ப கட்டணம் ரூ.600. பழங்குடி, பட்டியலிம், மாற்றுத்திறனாளிகள் விண்ணப்ப கட்டணம் ரூ.300.
6. 1800 425 6753 என்ற எண்ணை தொடர்பு கொண்டு கூடுதல் விளக்கங்களை பெற்றுக் கொள்ளவும்.

# அடோப் மாணவர்களுக்கு புதிய வாய்ப்பு Photoshop, Acrobat, Firefly AI இலவசமாக வழங்கப்படுகின்றன!

சென்னை , பிப். 20–

அடோப் இந்தியா: மாணவர்களுக்கு இலவச படைப்பாற்றல் கருவிகள்

உலகளாவிய தொழில்நுட்பத் தலைவரான அடோப் (Nasdaq: ADBE) இந்தியாவின் அடுத்த தலைமுறை திறமையாளர்களுக்கான ஏஐ–ஆல் இயக்கப்படும் படைப்பாற்றலை ஊக்குவிப்பதற்கான முதலீட்டை இந்தியா ஏஐ தாக்க உச்சிமாநாட்டில் (India AI Impact Summit 2026) அறிவித்தது. இந்த திட்டத்தின் மூலம் மாணவர்கள் Firefly, Photoshop மற்றும் Acrobat போன்ற முன்னணி மென்பொருட்களை இலவசமாகப் பயன்படுத்த முடியும்.

பாடத்திட்டம், பயிற்சி மற்றும் சான்றிதழ்கள்

மாணவர்கள் அடோப் மென்பொருட்களைப் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தனித்துவமான பாடத்திட்டங்கள், பயிற்சி மற்றும் தொழில்துறையால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களையும் பெறுவார்கள். இதில் Adobe FIREFLY, Acrobat Pro போன்ற கருவிகள், ஜெனரேட்டிவ் ஏஐ, மற்றும் கூகுள், ஒப்பன்ஏஐ, ரன்வே போன்ற முன்னணி மாடல்க ளுடன் ஒருங்கிணைந்து வேலை செய்கின்றன.


கூட்டு முயற்சிகள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள்

இந்த அறிவிப்புகள் இந்தியாவின் 'கிரியேட் இன் இந்தியா' திட்டத்துடன் இணைந்து, 15,000 பள்ளிகள் மற்றும் 500 கல்லூரிகளில் Content Creator Labs அமைக்க உதவும். அடோப், NASSCOM FutureSkills Prime மற்றும் MeitY உடன் இணைந்து, மாணவர்களுக்கு கிராபிக் டிசைன், அனிமேஷன், கேமிங், மீடியா, e–Commerce மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தேவையான படைப்பாற்றல் மற்றும் ஏஐ திறன்களை வழங்குகிறது.

# தினசரி செயலி பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் பைசா பஜார் பில் பேமெண்ட் & மொபைல் ரீசார்ஜ் அறிமுகப்படுத்துகிறது!

பைசா பஜார் ஆப்பில் பில் கட்டணங்கள் மற்றும் மொபைல் ரீசார்ஜ் வசதிகள் சேர்த்திருப்பது, அதன் டிஜிட்டல் நிதி சேவைகளை ஒருங்கிணைந்த தளம் மற்றும் மூலோபாய முன்னெடுப்பாக காணப்படுகிறது. ஒரே ஆப்பில் கிரெடிட் கார்டு பாக்கி, கடன் தவணை, மின்சாரம், DTH, LPG போன்ற அத்தியாவசிய கட்டணங்களை பாதுகாப்பாகவும் எளிதாகவும் நிர்வகிக்க முடிவது பயனர்களின் மாதாந்திர நிதி திட்டமிடல் மேம்படுத்தும் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் மூலம், ஆப் பயன்பாட்டின் அடிக்கடி தன்மையும், வாடிக்கையாளர்களின் நிதி ஒழுங்குமுறை திறனும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொபைல் ரீசார்ஜ் பிரிவு மட்டும் மாதத்திற்கு ₹15,000 கோடிக்கு மேல் மதிப்புள்ள மிகப்பெரிய சந்தையாக இருப்பதால், இந்த சேவைகள் Paisabazaar ஆப்புக்கு புதிய பயனர்களை அதிக அளவில் ஈர்க்கும் என்று நிறுவனம் நம்புகிறது. ரீசார்ஜ் போன்ற அதிக துடிப்புள்ள பரிவர்த்தனைகளின் மூலம் ஆப்பில் தொடங்கும் பயனர் பயணம், பின்னர் கடன், சேமிப்பு மற்றும் முதலீட்டு தயாரிப்புகளுக்கு விரிவடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் வழியாக பல்வேறு வருமானத்தரங்கள் மற்றும் வயது குழுக்கள் முழுவதும் நுழைவு அதிகரிக்கும் என நிறுவனம் கணிக் கிறது.




சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்பு மற்றும் முதலீட்டு தயாரிப்புகள், குறிப்பாக நிச்சய வைப்புகள் மற்றும் பத்திரங்கள் போன்ற சேவைகளுக்கு அடுத்த கட்டமாக, இந்த பில் கட்டணம் மற்றும் ரீசார்ஜ் வசதிகள் வருவதாக Paisabazaar தெரிவித்துள்ளது. வாடிக்கையாளர்கள் தங்கள் கடன் மதிப்பெண் கண்காணிப்பு முதல் பில்கள், சேமிப்பு, முதலீடு என முழு நிதி வாழ்க்கைச் சுழற்சியையும் ஒரே தளத்தில் நிர்வகிக்க உதவும் திறன் தான் நிறுவனத்தின் நீண்ட கால நோக்கம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் Paisabazaar, கடன் மைய தளத்திலிருந்து அன்றாட நிதி மேலாண்மை துணையாக மாறும் மாற்றத்தை மேலும் வலுப்படுத்தும் என நிறுவனம் கூறியுள்ளது.


# பிரிட்டானியா ஜிம் ஜாம் மார்வெல் புதிய ரெஞ்சை அறிமுகம்!




திருநெல்வேலி , பிப். 20–

பிரிட்டானியா ஜிம் ஜாம் மார்வெல் ரசிகர்களுக்காக புதிய ரெஞ்சை அறிமுகப்படுத்துகிறது! கேப்டன் அமெரிக்கா, தோர், அயர்ன் மேன், டெட்பூல் மற்றும் வோல்வரைன் ஆகிய சூப்பர் ஹீரோக்கள் கிராபிக்ஸ் மற்றும் கண்ணைக் கவரும் காட்சிகளுடன் ஒவ்வொரு பேக்கிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது சிற்றுண்டியை ஒரே கையால் எளிதாக அனுபவிக்கச் செய்யும் முக்கியக் கருத்தை வலியுறுத்துகிறது.

புதிய விளம்பரத்தில் ஐந்து மார்வெல் காஸ்பிளேயர்கள் ஒரு கற்பனையான சூப்பர் ஹீரோ பத்திரிகையாளர் சந்திப்பில், ஜிம்மி மற்றும் ஜாம்மியிட மிருந்து வரும் நகைச்சுவையான கேள்வியால் சூப்பர் ஹீரோக்களுக்கு கூட சிற்றுண்டி சாப்பிட நேரம் அரிதாக இருப்பதை வெளிப்படுத்துகின்றனர். இது பிரிட்டானியா ஜிம் ஜாமின் மையக் கருத்தை விளக்குகிறது ஒரு கையால் எளிதாக சாப்பிடக்கூடிய சிறந்த சிற்றுண்டி. "நோ–ட்விஸ்ட் சவால்" வாயிலாக ரசிகர்கள் ஸ்பெஷல் எடிஷன் பேக்குகளை ஸ்கேன் செய்து, விரும்பிய சூப்பர் ஹீரோக்களின் காலணிகளில் நுழைந்து இன்டராக்டிவ் கேம்களில் கலந்து, ஜிம் ஜாமை அனுபவிக்கலாம். விளையாட்டின் மூலம் ஜிம் ஜாம் காயின்களை வெல்லவும், மார்வெல் பொருட்கள் அல்லது ஹாங்காங் டிஸ்னிலேண்ட் பயணத்தைப் பெறவும் வாய்ப்பு உள்ளது.



# ராகுவின் சஞ்சாரம்..! இந்த ராசிக்காரர்களுக்கு டபுள் அதிர்ஷ்டம்!



ஜோதிடத்தில், கிரகங்கள் நகர்வது இயற்கையானது. சில கிரகங்கள் மாதத்திற்கு ஒரு முறை நகரும், மற்றவை 6 மாதங்களுக்கு அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு முறை நகரும். கிரக இயக்கங்கள் 12 ராசிகளையும் பாதிக்கின்றன. அவை ஒன்றாக வரும்போது, சில ராசிகளுக்கு பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன, மற்றவை மற்றவற்றுக்கு பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.

இருப்பினும், மிக விரைவில், ராகு கிரகம் ராசிக்கு பெயர்ச்சி அடையும். மே 18 அன்று, ராகு கும்ப ராசிக்கு பெயர்ச்சி அடைவார். இதன் காரணமாக, நான்கு ராசிகளும் அரச சுகங்களை அனுபவிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் தொடும் அனைத்தும் தங்கமாக மாறும். எனவே, அந்த ராசிகள் யாவை?

ரிஷபம்:

ரிஷப ராசிக்காரர்கள் ராகுவின் சஞ்சாரத்தால் அதிர்ஷ்டசாலிகளாக இருப்பார்கள். குறிப்பாக, இந்த ராசி கும்ப ராசிக்குள் நுழைவதால் அற்புதமான பலன்களைப் பெறும்.நீண்ட காலமாக வேலைக்காகக் காத்திருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். உடல்நலப் பிரச்சினைகளிலிருந்து விரைவில் விடுபடுவார்கள். உள்ளேயும் வெளியேயும் ஒரு நேர்மறையான சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:**

மிதுன ராசிக்காரர்கள் அனைவரும் தங்கமாக இருப்பார்கள். ராகுவின் சஞ்சாரம் காரணமாக, இந்த ராசிக்காரர்களுக்கு வேலையில் பதவி உயர்வு கிடைக்கும். அதுமட்டுமின்றி, சமூகத்தில் தங்கள் கௌரவத்தை அதிகரித்து, புதிய வீடு அல்லது வாகனம் வாங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**கன்னி:**

கன்னி ராசிக்காரர்களுக்கு வெளிநாடு பயணம் மேற்கொள்ள அதிக வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை இருக்கும். சமூகத்தில் மரியாதை மற்றும் நன்னெறி அதிகரிக்கும். மாணவர்கள் நல்ல பதவிகளைப் பெறுகிறார்கள். எல்லாம் ஒன்றாக வரும்.

**மீனம்:**

மீன ராசிக்காரர்களுக்கு, மேஷ மாதத்தில் சனியின் செல்வாக்கு ராகுவின் சஞ்சாரத்தால் ஓரளவு குறையும். பயணங்கள் லாபகரமாக இருக்கும். வருமானம் எதிர்பாராத விதமாக அதிகரிக்கும். கடந்த கால கடன்கள் அடைக்கப்படும், மேலும் உங்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் ஒரு நேர்மறையான சூழ்நிலை உருவாகும்.

# சி.எஸ்.ஐ நடுநிலைப்பள்ளியில் உலக இரத்த சோகை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்!





ஒட்டன்சத்திரம், பிப். 20–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சி.எஸ்.ஐ நடுநிலைப்பள்ளியில்உலக இரத்த சோகை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு வினாடி–வினா போட்டி நடைபெற்றது. இப்பள்ளியின் தலைமை ஆசிரியை பேரின்பராணி தலைமை வகித்தார்.ஆசிரியை சாந்தி சத்திய ஷீலா வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கூட்டுறவு துறை துணைப் பதிவாளர் (ஓய்வு) டேனியல் முன்னிலை வகித்தார்.

ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை முன்னாள் தலைமை மருத்துவர் மற்றும் இந்திய மருத்துவ கழகம் ஒட்டன்சத்திரம் கிளைச்செயலாளர் டாக்டர்.ஆசைத்தம்பி கலந்து கொண்டு வினாடி–வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கினார். ஆசிரியர் உத்தமன் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை விளையாட்டுப்பிரிவு ஆசிரியர் ராஜ்குமார் செய்து இருந்தார்.

# சற்றே குறைந்த தங்கம் விலை!



சென்னை, பிப். 20–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை குறைந்துள்ளது. தங்கம் விலை சவரனுக்கு ரூ.640 குறைந்து ரூ.1,15,360–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.80 குறைந்து ரூ.14,420–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.270–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

# உங்களுக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருக்கா? இனி அதை தொட மாட்டீங்க..!



அலுவலகத்தில் வேலை அழுத்தம் அதிகரிக்கும்போதோ அல்லது ஏதேனும் பதற்றம் ஏற்படும்போதோ உடனடியாக சிகரெட் பற்ற வைக்கும் பழக்கம் பலருக்கு உண்டு. புகைபிடித்தல் மனதை அமைதிப்படுத்தும் மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்கும் என்று பலர் நம்புகிறார்கள். ஆனால் மருத்துவ நிபுணர்கள் இது ஒரு முழுமையான தவறான கருத்து என்றும், உண்மையில், புகைபிடித்தல் அதைக் குறைப்பதற்குப் பதிலாக மன அழுத்தத்தை அதிகரிக்கிறது என்றும் எச்சரிக்கின்றனர்.

சிகரெட்டுகளில் உள்ள நிக்கோடின் நுரையீரல் வழியாக சில நொடிகளில் மூளையை அடைகிறது. இது உடலில் நல்ல மனநிலையை ஏற்படுத்தும் ஹார்மோன் டோபமைனை வெளியிடுகிறது. இது சில நிமிடங்களுக்கு தெரியாத மகிழ்ச்சி மற்றும் ஆறுதலின் உணர்வை ஏற்படுத்துகிறது. இந்த தற்காலிக உணர்வைக் கண்டு, புகைபிடித்தல் மன அழுத்தத்தைக் குறைக்கிறது என்று மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

**நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள்?**

டெல்லியில் உள்ள நுரையீரல் ஆரோக்கிய மையத்தின் டாக்டர் நேஹா வதேரா இது குறித்து ஒரு முக்கிய விளக்கத்தை அளித்துள்ளார். நிக்கோடின் தரும் அமைதி சில நிமிடங்கள் மட்டுமே நீடிக்கும். உடலில் நிக்கோடினின் விளைவு நீங்கியவுடன், மீண்டும் சிகரெட் புகைக்க ஆசை தொடங்குகிறது. இது முன்பை விட அதிக அமைதியின்மை, எரிச்சல் மற்றும் பதட்டத்திற்கு வழிவகுக்கிறது. நீண்டகால புகைப்பிடிப்பவர்களில் மன அழுத்த அளவுகள் இயல்பை விட அதிகமாக இருப்பதாக ஆராய்ச்சி காட்டுகிறது.

**உடலுக்கு ஏற்படும் பிற தீங்குகள்**

புகைபிடிப்பதால் மனநலம் மட்டுமல்ல, உயிருக்கு ஆபத்தான பிரச்சனைகளும் ஏற்படும் என்று டாக்டர் நேஹா எச்சரித்தார். நுரையீரல் நோய்கள்: அடிக்கடி இருமல், சுவாசிப்பதில் சிரமம் மற்றும் நுரையீரல் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளது.

மாரடைப்பு: சிகரெட் புகைப்பது நுரையீரல் வீக்கம் மற்றும் சிஓபிடி போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், மாரடைப்பு அபாயத்தையும் அதிகரிக்கிறது.

**புகைபிடிப்பதை எப்படி நிறுத்துவது?**

புகைபிடிப்பதை நிறுத்துவது என்பது சாத்தியமற்றது அல்ல. தற்போது, மருத்துவத்தில் மருந்துகள் மற்றும் பல்வேறு வகையான சிகிச்சைகள் உள்ளன. புகைபிடிப்பதை நிறுத்திய ஆரம்ப நாட்களில் இது கொஞ்சம் சங்கடமாக உணரலாம் என்றாலும், நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் குறுகிய கால சிகிச்சை மூலம் இந்த பழக்கத்திலிருந்து நீங்கள் எளிதாக விடுபடலாம். நினைவில் கொள்ளுங்கள்.. ஒரு சிறிய துண்டு சிகரெட் உங்கள் மன அழுத்தத்தைக் குறைக்காது, ஆனால் உங்கள் ஆயுளைக் குறைக்கும்..

# 3 சக்கர ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனங்களை சரக்கு வாகனங்களாக பயன்படுத்த தடை!



சென்னை, பிப். 20–

தமிழ்நாட்டில் 3 சக்கர ஆட்டோ ரிக்ஷா மற்றும் இருசக்கர வாகனங்களை சரக்கு வாகனங்களாக பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறி இயக்கப்படும் வாகனங்கள் சோதனையின் போது கண்டறியப்பட்டால் சிறைபிடிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு போக்குவரத்து ஆணையர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், தமிழ்நாட்டில் 3 சக்கர ஆட்டோ ரிக்ஷா மற்றும் இருசக்கர வாகனங்களை சரக்கு வாகனங்களாக பயன்படுத்த கூடாது.

தமிழ்நாடு ஆட்டோ, கால் டாக்ஸி ஓட்டுநர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ராபிட்டோ மற்றும் போர்ட்டர் செயலி மூலமாக ஆட்டோ ரிக்ஷா மற்றும் இருசக்கர வாகனங்கள் சரக்குகளை ஏற்றிசெல்லும் வாகனங்களாக பயன்படுத்தப்பட்டு வருவதாக தொடர்ந்து புகார் வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதன் பிறகு காலை மற்றும் மாலை வேலைகளில் போக்குவரத்து ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்கள் திடீர் வாகன சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போல, சம்பந்தபட்ட செயலிகள் மூலம் இயக்கப்படும் இந்த வாகனங்களை ஆய்வு செய்து சரக்குகளை ஏற்றி செல்லும் இருசக்கர வாகனங்களை சிறைபிடிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. சிறைபிடிக்கப்படும் வாகனங்கள் எந்த செயலி மூலம் இயக்கப்பட்டது என்பது குறித்த விவரங்கள் தினமும் உடனடியாக போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அதிரடியாக மாறும் ரூல்ஸ்..!! 1 ஆம் தேதி முதல் அமல்..!!




சென்னை, பிப். 20–

ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நாட்டின் நிதித்துறையிலும் பல்வேறு அதிரடி மாற்றங்கள் அரங்கேறவுள்ளன. புதிய வருமான வரிச் சட்டம் 2025–ன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மாற்றங்கள், சாமானிய மக்களின் அன்றாட பணப் பரிவர்த்தனைகள், சொத்து விற்பனை மற்றும் காப்பீடு ஆகிய துறைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன. வரி செலுத்துவோருக்குச் சில சலுகைகளையும், அதே சமயம் சில இடங்களில் கட்டுப்பாடுகளையும் இந்த புதிய விதிகள் முன்வைக்கின்றன. புதிய விதிகளின்படி, வங்கி மற்றும் அஞ்சலகங்களில் ரொக்கப் பரிவர்த்தனை செய்பவர்களுக்குப் பெரிய நிம்மதி கிடைத்துள்ளது. இதற்கு முன்னதாக 50,000 ரூபாய்க்கு மேல் டெபாசிட் செய்யவோ அல்லது எடுக்கவோ பான் கார்டு கட்டாயமாக இருந்த நிலையில், இனி ஒரு நிதியாண்டில் 10 லட்சம் ரூபாய் வரையிலான ரொக்கப் பரிவர்த்தனைகளுக்கு பான் எண் வழங்கத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், உணவகங்களில் ஒரு லட்சம் ரூபாய் வரை செலவு செய்பவர்களுக்கும், 5 லட்சம் ரூபாய்க்குக் கீழ் கார் அல்லது பைக் வாங்குபவர்களுக்கும் பான் கார்டு சமர்ப்பிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது நடுத்தர வர்க்கத்தினரின் சிறு முதலீடுகள் மற்றும் செலவுகளை எளிதாக்கும் ஒரு முயற்சியாகப் பார்க்கப்படுகிறது. சொத்து வாங்குபவர்களுக்கும் இந்த முறை மகிழ்ச்சியான செய்தி காத்திருக்கிறது. முன்னதாக 10 லட்சம் ரூபாய்க்கு மேல் சொத்து வாங்கினால் பான் கார்டு கட்டாயம் என்ற நிலை இருந்தது; தற்போது இந்த வரம்பு 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக, வெளிநாடு வாழ் இந்தியர்களிடம் (NRI) இருந்து சொத்து வாங்குபவர்கள் இனி 'TAN' எண் பெற அலைய வேண்டிய அவசியமில்லை. அவர்கள் நேரடியாகத் தங்களின் பான் எண்ணைப் பயன்படுத்தியே டி.டி.எஸ் (TDS) தொகையைக் கழிக்க முடியும். இந்த நடைமுறைச் சிக்கல் குறைப்பு ரியல் எஸ்டேட் துறையில் பணப் பரிவர்த்தனைகளை வேகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல், அனைத்து வகையான காப்பீட்டுத் திட்டங்களுக்கும் இனி பான் கார்டு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முன்னதாக பெரிய தொகை கொண்ட பாலிசிகளுக்கு மட்டுமே இந்த விதி இருந்தது, ஆனால் இனி எந்தவொரு இன்சூரன்ஸ் பாலிசி எடுத்தாலும் பான் எண் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. அதே சமயம், மனிதநேய அடிப்படையில் ஒரு முக்கிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மோட்டார் விபத்து இழப்பீட்டுத் தீர்ப்பாயம் மூலம் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் இழப்பீட்டுத் தொகைக்கான வட்டிக்கு இனி முழுமையாக வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முழுத்தொகையும் எவ்வித வரிப் பிடித்தமுமின்றி போய் சேரும்.

மேலும், வருமான வரித் தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, தணிக்கை (Audit) செய்யத் தேவையில்லாத சிறு வணிகங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கு ஐடிஆர் தாக்கல் செய்ய ஆகஸ்ட் 31 வரை ஒரு மாதம் கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், மாதச் சம்பளம் வாங்குவோர் மற்றும் ITR–1, ITR–2 படிவங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு எவ்வித மாற்றமும் இல்லை; அவர்கள் வழக்கம்போல ஜூலை 31–க்குள் தங்களது வரிக் கணக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

# தேர்தலுக்கு முன்பு வெளியாகப் போகும் 2 மாஸ் அறிவிப்பு..!! இனி மாதந்தோறும் மின் கணக்கீடு..!! அரசு ஊழியர்களுக்கும் அடித்த ஜாக்பாட்..!!

சென்னை, பிப். 20–

தமிழ்நாட்டில் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், ஆளுங்கட்சியான திமுக அடுத்தடுத்து அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு அரசியல் களத்தை அதிரவைத்து வருகிறது. பொதுவாகவே தேர்தல் நெருங்கும் வேளையில் சலுகைகள் அறிவிக்கப்படுவது வழக்கமான ஒன்றுதான் என்றாலும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தற்போது மேற்கொண்டு வரும் நகர்வுகள் சாமானிய மக்கள் முதல் அரசு ஊழியர்கள் வரை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.




**மகளிர் உரிமைத் தொகை :**

பெண்களின் வாக்குகளைக் கவர்வதில் திமுக அதிமுக இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. அதிமுகவின் 'குலவிளக்கு' திட்டத்திற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், தற்போது வழங்கப்பட்டு வரும் 1,000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகையை, அடுத்த முறை ஆட்சிக்கு வரும்போது 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்போவதாக முதலமைச்சர் அறிவித்துள்ளார். இதுமட்டுமின்றி, சமீபத்தில் சுமார் 1.25 கோடி பெண்களுக்கு கோடைக்கால சிறப்புத் தொகையை முன்கூட்டியே வழங்கி, இல்லத்தரசிகளின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது தமிழக அரசு.

**அரசு ஊழியர்களின் பென்ஷன் கனவு நனவாகுமா..?**

பல ஆண்டுகளாகப் போராட்டக் களத்தில் இருந்த அரசு ஊழியர்களின் கோரிக்கைக்கு 'தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்' (TAPS) மூலம் ஒரு தீர்வை முன்வைத்துள்ளார் ஸ்டாலின். ஓய்வு பெறும்போது கடைசிச் சம்பளத்தில் 50 சதவீதத்தை ஓய்வூதியமாக உறுதி செய்யும் இந்த திட்டம், அரசுக்கு 13,000 கோடி ரூபாய் கூடுதல் சுமையை ஏற்படுத்தினாலும், அரசு ஊழியர்களின் வாக்குகளை தக்கவைக்க எடுக்கப்பட்ட ஒருமாஸ்டர்ஸ்ட்ரோக்காகவே இது பார்க்கப்படுகிறது. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் நிலவிய குழப்பங்களுக்கு இது ஒரு முற்றுப்புள்ளியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மாதாந்திர மின் கட்டணம் :**

திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளில் மிகவும் முக்கியமானது 'மாதாந்திர மின் கட்டண முறை'. இரு மாதங்களுக்கு ஒருமுறை கணக்கீடு செய்யப்படுவதால் ஸ்லாப் உயர்ந்து அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதாகப் பொது மக்கள் நீண்டகாலமாகப் புகார் கூறி வந்தனர். இதற்குத் தீர்வாக, மாநிலம் முழுவதும் ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்ட பிறகு மாதாந்திரக் கணக்கீடு முறை அமலுக்கு வரும் எனத் தெரிகிறது. இதன் மூலம் மின்சார கட்டண சுமை கணிசமாகக் குறையும் என்பதால், நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் இந்த அறிவிப்பு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**மின்சார வாரியத்தில் அதிரடி மாற்றங்கள் :**

புதிய மின் இணைப்புக்கு விண்ணப்பித்தால் வெறும் 3 நாட்களில் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்ற உத்தரவு மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும், மீட்டர் தட்டுப்பாட்டைப் போக்க மக்களே மீட்டர்களை வாங்கிக் கொள்ள அனுமதித்தது மற்றும் கூடுதலாக வசூலிக்கப்பட்ட மேம்பாட்டுக் கட்டணத்தை மீண்டும் பொது மக்களுக்கே திருப்பி வழங்க உத்தரவிட்டது. இதற்கிடையே, தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே, இந்த மாதாந்திர மின் கட்டண அறிவிப்பை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுவிட அரசு தீவிரம் காட்டி வருகிறது.

# இனி நகைக்கடன் தள்ளுபடி கிடையாது..? கூட்டுறவு வங்கிகள் திவாலாகும் அபாயம்..?

சென்னை, பிப். 20–

தமிழக அரசியலில் தேர்தல் களம் சூடுபிடிக்கும் போதெல்லாம், கூட்டுறவு வங்கிகளில் 5 சவரனுக்கு உட்பட்ட நகைக்கடன் தள்ளுபடி என்ற வாக்குறுதி ஒரு மந்திர சொல்லாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2021–ம் ஆண்டு திமுக அரசு பொறுப்பேற்றபோது, சுமார் 14.50 லட்சம் பேருக்கு 6,000 கோடி ரூபாய் மதிப்பிலான கடன்களைத் தள்ளுபடி செய்து ஒரு பெரிய நிம்மதியை வழங்கியது.



ஆனால், 2026–ஆம் ஆண்டின் தற்போதைய நிதிச் சூழல் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களைக் கூர்ந்து கவனித்தால், இனி வரும் காலங்களில் இத்தகைய தள்ளுபடி அறிவிப்புகள் நடைமுறைக்கு சாத்தியமில்லை என்றே பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்த எச்சரிக்கைக்கு பின்னால் இருக்கும் மிக முக்கியமான காரணம், கூட்டுறவு வங்கிகள் எதிர்கொண்டு வரும் கடும் நிதி நெருக்கடியாகும். ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்ட தொகையை அரசு வங்கிகளுக்கு திரும்ப வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால், பல சங்கங்கள் வைப்புத்தொகை வைத்திருப்பவர்களுக்கு வட்டி கூட வழங்க முடியாமல் தத்தளித்து வருகின்றன. தற்போது 5 சவரனுக்கு கீழ் நிலுவையில் உள்ள கடன்களின் மொத்த மதிப்பு சுமார் 25,000 கோடி ரூபாயை தாண்டும் என மதிப்பிடப்படுகிறது. தங்கம் விலை விண்ணைத் தொட்டுள்ள நிலையில், கடன் மதிப்பும் அதிகரித்துள்ளது. இவ்வளவு பெரிய தொகையை மீண்டும் தள்ளுபடி செய்தால், அது கூட்டுறவுத் துறையின் முதுகெலும்பையே உடைத்து, வங்கிகளை திவாலாகும் நிலைக்குத் தள்ளிவிடும்.

கடந்த காலங்களில் நிலவிய முறைகேடுகளை தடுக்கும் வகையில், தற்போது கூட்டுறவுத் துறை முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. முன்னதாக ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் பல்வேறு வங்கிகளில் கடன் பெற்று சலுகையைப் பெற்று வந்தனர். ஆனால், இன்று ஆதார் மற்றும் ரேஷன் கார்டுகள் வங்கிக் கணக்குகளுடன் மிக துல்லியமாக இணைக்கப்பட்டுள்ளதால், தகுதியுள்ள நபர்களை கண்டறிவது மிக எளிதாகிவிட்டது. அரசின் இந்த 'டிஜிட்டல்' கண்காணிப்பு முறை, தேவையற்ற தள்ளுபடிகள் மற்றும் விதிமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. தமிழக அரசின் தற்போதைய ஒட்டுமொத்த கடன் சுமையைக் கணக்கில் கொண்டால், மீண்டும் ஒரு மெகா தள்ளுபடி அறிவிப்பு என்பது அரசின் நிதி மேலாண்மைக்கு மிகப்பெரிய சவாலாக அமையும். "வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட தேவையில்லை" என்ற எதிர்பார்ப்பில் தவணை கட்டாமல் இருப்பவர்கள், வட்டிச் சுமையால் பாதிக்கப்படும் சூழலே நிலவுகிறது. குறைந்த வட்டியில் கடன் பெறுவதைத் தாண்டி, முழுமையான கடன் தள்ளுபடி என்பது இனி ஒரு கனவாகவே இருக்கக்கூடும் என்பதே கசப்பான உண்மை.



இஸ்மாயில் லக்கி
டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## தேர்வு இல்லாமல் இந்திய கடற்படையில் வேலை..!



இந்திய கடற்படையில் அதிகாரியாக சேர விரும்பும் இளைஞர்களுக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பு. ஷார்ட் சர்வீஸ் கமிஷன் (SSC) முறையின் கீழ் மொத்தம் 260 பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இளங்கலை/முதுகலை தகுதிகள் கொண்ட திருமணமாகாத ஆண்கள் மற்றும் பெண்கள் விண்ணப்பிக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பயிற்சிக்குப் பிறகு சப் லெப்டினன்ட் பதவியில் நியமிக்கப்படுவார்கள். முதல் மாதத்திலிருந்து சுமார் ரூ. 1,25,000 சம்பளம் பெற வாய்ப்பு உள்ளது.

**தேர்வு இல்லாமல் கடற்படையில் வேலை**

இந்த SSC பதவிகள் முக்கியமாக 2 பிரிவுகளில் உள்ளன:
நிர்வாகப் பிரிவு தொழில்நுட்பப் பிரிவு

இவை அனைத்தும் நிலை–10 அதிகாரப்பூர்வ பதவிகள்.

எழுத்துத் தேர்வு இல்லை. கல்வி மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதி தேர்வு. பின்னர் SSB (சேவைத் தேர்வு வாரியம்) நேர்காணல். மருத்துவத் தேர்வுகளுக்குப் பிறகு இறுதித் தேர்வு. கல்வியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு.

**சம்பளம் மற்றும் சேவை விவரங்கள்**

பயிற்சி நடைபெறும் இடம்:

இந்திய கடற்படை அகாடமி, எஜிமாலா பயிற்சி காலம்: 22 வாரங்கள் (ஜனவரி 2027 முதல்)

அடிப்படை ஊதியம்: ரூ.56,100 (நிலை10) கூடுதல்: டிஏ, எச்ஆர்ஏ, பிற கொடுப்பனவுகள் மொத்த ஊதியம்: தோராயமாக ரூ.1.25 லட்சம்/மாதம்

தொடக்கம்: 12 ஆண்டுகள் நீட்டிப்பு: கூடுதல் 2 ஆண்டுகள் அதிகபட்சம்: 14 ஆண்டுகள்

தகுதி: பதவியைப் பொறுத்து 2 அல்லது 3 ஆண்டுகள்

SSC க்குப் பிறகு சிவில் துறையில் நல்ல வாய்ப்புகள் இருக்கும்.

காலியிடங்கள், தகுதிகள்

நிர்வாகப் பிரிவு பொது சேவை 76 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் 18 கடற்படை விமான செயல்பாட்டு அதிகாரி (பார்வையாளர்) 20 பைலட் 25

லாஜிஸ்டிக்ஸ் 10 தகுதிகள்: BE/B.Tech–ல் குறைந்தது 60%. சிலவற்றில் இன்டர் படிப்பிலும் 60% தேவை.

லாஜிஸ்டிக்ஸ் பதவிகளுக்கான தகுதிகள்: BE/B.Tech அல்லது MBA/MSc (IT)/MCA/PG டிப்ளமோ/சப்ளை செயின்/B.Com + லாஜிஸ்டிக்ஸ்

கல்வி பிரிவு 15 பதவிகள் B.Tech / MSc / MCA / MBA தகுதிகள்

சம்பந்தப்பட்ட துறைகளின்படி தேர்வு

தொழில்நுட்ப பிரிவு பொறியியல் 42 எலக்ட்ரிக்கல் 38 நீர்மூழ்கி தொழில்நுட்பம் (பொறியியல்) 8 நீர்மூழ்கி தொழில்நுட்பம் (மின்சாரம்) 8

தகுதி: தொடர்புடைய துறையில் BE/B.Tech பாடத்தில் 60%

வயது வரம்பு

பிறப்பு: ஜனவரி 02, 2000 ஜூலை 01, 2007 க்கு இடையில் இறுதி ஆண்டு மாணவர்களும் தகுதியுடையவர்கள். NCC 'C' சான்றிதழ் பெற்றவர்களுக்கு கல்வி மதிப்பெண்களில் 5% தளர்வு.

SSB நேர்காணல் மையங்கள்

பெங்களூர், போபால், விசாகப்பட்டினம், கொல்கத்தா

முக்கிய தேதி

விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி: 24 பிப்ரவரி 2026

விண்ணப்பிப்பதற்கான அதிகாரப்பூர்வ வலைத்தளம்: https://www.joinindiannavy.gov.in/ இந்திய கடற்படையில் அதிகாரி நிலை வேலை நல்ல சம்பளம், மரியாதைக்குரிய தொழில், நாட்டிற்கு சேவை செய்யும் வாய்ப்பு. தகுதியானவர்கள் தாமதமின்றி விண்ணப்பிக்கலாம்.

# லாரி உள்ளிட்ட வாகனங்களுக்கான FC கட்டண உயர்வு ஒத்தி வைப்பு; தமிழக அரசு உத்தரவு!



சென்னை, பிப். 20–

லாரி உள்ளிட்ட வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ் (FC) கட்டண உயர்வு 3 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. லாரி உரிமையாளர் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. தமிழ்நாட்டில் லாரி, வேன் மற்றும் பேருந்து உள்ளிட்ட கனரக வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ் (Fitness Certificate) புதுப்பிக்கும் கட்டணத்தை பன்மடங்கு உயர்த்த ஒன்றிய அரசு உத்தரவிட்டிருந்தது. இந்த திடீர் கட்டண உயர்வு போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள உரிமையாளர்களுக்கு பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்திய நிலையில், பல்வேறு லாரி உரிமையாளர் சங்கங்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தன.



# அஜித் பவார் உயிரிழப்பில் மர்மம்? விரிவாக விசாரிக்க மகன் வலியுறுத்தல்!



புனே, பிப். 20–

தனியார் விமான நிறுவனத்தின் அலட்சியம் காரணமாகவே இந்த விபத்து நிகழ்ந்ததாக, அஜித் பவாரின் மகன் ஜெய் பவார் பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது: விமானத்தின் கருப்பு பெட்டி அவ்வளவு எளிதில் சேதமடையாது. மஹாராஷ்டிரா மக்களுக்கு நடந்த உண்மை வெளிப்படையாக தெரிய வேண்டும். எனவே, இந்த விவகாரம் குறித்து அரசு விரிவாக விசாரணை நடத்த வேண்டும். அலட்சியம் மற்றும் முறைகேடுகள் காரணமாக இந்த விபத்து நடந்து இருப்பதாக பேச்சுகள் அடிபடுகின்றன. எனவே, பாரம்பட்சமின்றி, விரிவாக விசாரணை நடத்தி உண்மையை வெளிக் கொண்டு வர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான பிரபுல் படேலும், விபத்துக்கு விமான நிறுவனமே காரணம் என குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும், விமானி அலட்சியமாக பணியாற்றியதே அஜித் பவார் உயிரிழக்க காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்த விஜய் உத்தரவு!



சென்னை, பிப். 20–

அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்த தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் இன்னும் சில மாதங்களின் சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அரசியல் களம் சூடுப்பிடித்துள்ளது. ஒரு பக்கம் கூட்டணி தாவும் கட்சிகள், மறுபக்கம் தேர்தல் பிரச்சாரக் களத்திலும் இறங்கியுள்ளன. இந்நிலையில், தவெக சார்பில் புதிய உத்தரவை அக்கட்சியின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் செயல்வீ ரர்கள் கூட்டத்தை நடத்த விஜய் உத்தரவிட்டு ள்ளது. வரும் 1ம் தேதி முதல் செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்த உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தேர்தல் பணிகள் தொடர்பாக நிர்வாகிகளை வழிநடத்த மாவட்ட செயலா ளர்களுக்கு உத்தரவிடப்பட்டு ள்ளது.

# ஒரே தண்டவாளத்தில் வந்த இரு ரயில்கள்... சென்னையில் பரபரப்பு!

சென்னை, பிப். 20–

சென்னை கோடம்பாக்கத்தில் ஒரே தண்டவாளத்தில் இரு ரயில்கள் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பீதியில் பயணிகள் ரயிலில் இருந்து குதித்து வெளியே ஓடினர்.




கோடம்பாக்கம் ரயில் நிறுத்தத்திற்கு சென்னை கடற்கரை நோக்கி ரயில் ஒன்று வந்தது. இதைத்தொடர்ந்து, சிறிது நேரத்தில் தாம்பரம் செல்லும் ரயிலும் அதே தண்டவாளத்தில் வந்தது. இதனால், ரயில்நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஒரே தண்டவாளத்தில் இரு ரயில்கள் இருப்பதை உணர்ந்து சுதாரித்துக் கொண்ட லோகோ பைலட், ரயிலை பாதியிலேயே நிறுத்தி னார். இதனால், பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. ஒரே தண்டவாளத்தில் இரு ரயில்கள் இருப்பதை உணர்ந்த பயணிகள், பீதியில் ரயிலில் இருந்து குதித்து வெளியே ஓடினர். இந்த சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது. இதனிடையே, இந்த சம்ப வம் தொடர்பாக ரயில்வே அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி வரு கின்றனர்.

# விஐடி துணை தலைவர் சங்கர் விசுவநாதனுக்கு "கவுரவ டாக்டர்" பட்டம்; தாய்லாந்து பல்கலை. வழங்கியது!



வேலூர், பிப். 20–

விஐடி துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன் அவர்களுக்கு தாய்லாந்தின் பாங்காங் நகரில் உள்ள ராஜமங்கலா தொழில்நுட்ப பல்கலைக்கழகம் க்ருங்தெப் (RMUTK) "கவுரவ டாக்டர்" பட்டம் வழங்கியுள்ளது. தாய்லாந்து நாட்டின் பிரிவி கவுன்சில் ஆலோசனை குழு உறுப்பினரான பலகோர்ன் சுவன்ரத் மற்றும் ராஜமங்கலா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தலைவர் பிச்சை ஜன்மனி ஆகியோர் விஐடி துணைத் தலைவர் சங்கர் விசுவநா தனுக்கு "கவுரவ டாக்டர்" பட்டத்தை வழங்கி சிறப்பித்த னர். இந்த உயரிய விருது திரு சங்கர் விசுவநாதனின் பொறியியல் கல்வித்துறையில் சிறப்பான பங்களிப்பு மற்றும் தலைமைத்துவம் மற்றும் உயர்கல்வியில் தொழில்நுட்ப மேலாண்மை முன்னேற்றம் ஆகியவற்றை பாராட்டி "கவுரவ டாக்டர்" பட்டம் வழங்கப்பட்டு ள்ளது. நிகழ்வில் விஐடி வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன், ரமணி பாலசுந்தரம், உதவி துணை தலைவர் காதம்பரி எஸ்.விசுவநாதன், டாக்டர் ஏ.ஷ்ரவன் கிருஷ்ணா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ராசிபுரம் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் விழா...!



நாமக்கல், பிப். 20–

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் பிரசித்தி பெற்ற அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் மகா சிவராத்திரி விழா கடந்த சில நாட்களாக நடந்து வருகிறது. கடந்த 16ம் தேதி தீமிதி விழா நடந்தது.

பிரசித்திப் பெற்ற மயான கொள்ளை நிகழ்ச்சி இன்று நடந்தது. இதையொட்டி அங்காள பரமேஸ்வரி அம்மன், நடராஜர் உற்சவ மூர்த்திகள் அழைப்பு நடந்தது. இதனைத் தொடர்ந்து அங்காளம்மன் சாமியை அலங்கரித்து பழைய பஸ் நிலையம் வழியாக சிங்க வாகனத்தில் 100க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். இதைத்தொடர்ந்து முத்துக்காளிபட்டி மயானத்தில் பேச்சி அம்மனுக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது.

அதன் பின்னர் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக கொண்டுவந்திருந்த ஆடு, கோழிகளை விரதம் இருந்து வந்திருந்த ஆடு கடிக்கும் பூசாரிகள் ஆக்ரோஷத்துடன் கடித்து மயானக்கொள்ளை நடத்தினர்.

# பணி நியமனத்தில் முறைகேடு; அமைச்சர் நேரு மீது வழக்கு பதிய ஐகோர்ட் உத்தரவு!



சென்னை, பிப். 20–

பணி நியமன முறைகேடு வழக்கில், தமிழக அமைச்சர் நேரு மீது வழக்கு பதிவு செய்து விசாரிக்க லஞ்ச ஒழிப்பு துறைக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர் நேருவின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் ஊழல் நடந்துள்ளதாக , அமலாக்கத்துறை தமிழக போலீஸ் டிஜிபிக்கு அடுத்தடுத்து கடிதங்களை அனுப்பியது . வெவ்வேறு இடங்களில் அமலாக்கத்துறை நடத்திய சோதனையில் கிடைத்த ஆவணங்கள் , டிஜிட்டல் கருவிகளில் பதிவாகி இருந்த தகவல்கள் அடிப்படையில் இந்த புகார் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அமலாக்கத்துறை அனுப்பிய புகார் கடிதங்களின் அடிப்படையில் , அமைச்சர் நேரு மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணையை லஞ்ச ஒழிப்பு போலீசார் தொடங்கியுள்ளனர். இதற்கிடையே இது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை எனக்கூறி அதிமுக தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு இன்று (பிப்ரவரி 20) சென்னை ஐகோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, அமலாக்கத்துறை கடிதம் குறித்து ஆரம்ப கட்ட விசாரணை நடந்து வருவதாக லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது. பின்னர், "அமலாக்கத்துறை கடிதம் அடிப்படையில் அமைச்சர் நேரு மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

* அமலாக்கத்துறை ஆதாரங்களில் முகாந்திரங்கள் உள்ளன. புகார் அளித்தும் தாமதமாக விசாரணை நடத்தப்பட்டு ள்ளது. விசாரணையை உடனே துவங்க வேண்டும் .

* சுதந்திரமாக லஞ்ச ஒழிப்புத்துறை உடனே வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும். இவ்வாறு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் கிளம்பியுள்ள இந்த விவகாரம், திமுகவுக்கும் அமைச்சர் நேருவுக்கும் பெரும் தலைவலியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

# சட்டசபையில் அமைச்சர்களின் பதில் உரை: அ.தி.மு.க. புறக்கணிப்பு!



சென்னை, பிப். 20–

தமிழக சட்டசபையில் கடந்த 17–ந் தேதி 2026–2027–ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. பொது பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசும், வேளாண்மை பட்ஜெட்டை அத்துறையின் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வமும் தாக்கல் செய்தனர். தொடர்ந்து, 18, 19 ஆகிய தேதிகளில் 2 நாட்கள் பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் பங்கேற்று ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். விவாதத்தின் நிறைவு நாளான நேற்று அதிமுக பொதுச் செயலாளரும், சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி பேசினார். அவருடைய அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்தனர். இதனால், சட்டசபையில் அனல் பறந்தது என்றாலும், முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த விவாதத்தின்போது அவையில் இல்லை.

இந்த நிலையில், சட்டசபையில் இன்று பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் ஆகியோர் பேசுகிறார்கள். ஆனால், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. அமைச்சர்களின் பதிலுரையை புறக்கணித்துள்ளது. எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்பட அ.தி.மு.க. உறுப்பினர்கள் யாரும் அவைக்கு வரவில்லை.

அதேநேரத்தில் ராமதாஸ் ஆதரவு பா.ம.க. எம்.எல்.ஏ.க்கள் ஜி.கே. மணி, அருள் ஆகியோர் சட்டமன்ற கூட்டத்தொடரில் கலந்து கொண்டுள்ளநிலையில், அன்புமணி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 3 பேர் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர்.

இதற்கு முன்பு கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான முதல்–அமைச்சரின் பதிலுரையையும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் புறக்கணித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க. விருப்ப மனு விநியோகம் தொடங்கியது!




சென்னை, பிப். 20–

தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டசபை தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுவதற்கான விருப்ப மனு விநியோகம் இன்று தொடங்கியது. விருப்ப மனுவை மார்ச் 2–ந்தேதிக்குள் பூர்த்தி செய்து வழங்க வேண்டும். இதற்கு கட்டணமாக பொதுத் தொகுதிக்கு ரூ.25,000, மகளிர் மற்றும் தனித் தொகுதிக்கு ரூ.10,000 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பித்த தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டால் அவர்களுக்கான விண்ணப்பக் கட்டணம் திருப்பி தரப்படும்.

மேலும், விண்ணப்பப் படிவத்தை ரூ.1000 செலுத்தி சென்னையில் உள்ள தலைமைக் கழகத்தில் பெற்று கொள்ளலாம்.

# பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை; ஆனால் தேர்தலுக்கு முன் பணம்! பிரியங்கா காந்தி!



அசாம், பிப். 20–

அஸ்ஸாம் மாநிலத்தில் பாஜக கூட்டணிக்கும், காங்கிரஸ் கூட்டணிக்கும் நேரடிப் போட்டி நிலவுகிறது. இரு கட்சிகளின் தலைவர்களும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அஸ்ஸாமுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் பிரியங்கா காந்தி, குவஹாத்தியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு வியாழக்கிழமை உரையாற்றினார்.

அவர் பேசியதாவது:

"அஸ்ஸாமில் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கிறதா? பாஜக அரசு எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் தேர்தலுக்கு முன்பாக பெண்களுக்கு பணம் கொடுக்கிறார்கள். ஆனால், ஆட்சியில் இருந்த 5 ஆண்டுகளில் பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டதா? குற்றம் அதிகரித்து வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை பெண்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது? எத்தனை பெண்கள் அவர்களின் சொந்த கால்களில் நிற்க உதவி வழங்கப்பட்டது?

மக்களின் கைகளில் உள்ள அனைத்து செல்வங்களும் இந்த மாநில ஆளுத்தை ஆளும் ஒரு குடும்பத்தின் கைகளுக்குச் செல்கின்றன" எனத் தெரிவித்தார்.

முன்னதாக அஸ்ஸாம் பாஜக அரசுக்கு எதிராக 20 குற்றச்சாட்டுகள் அடங்கிய "மக்கள் குற்றப்பத்திரிகை"யை பிரியங்கா காந்தி வெளியிட்டார்.

அஸ்ஸாம் மக்களின் பூர்வீக நிலங்களை பெரு நிறுவனங்களுக்கு அளித்ததாகவும், பொருளாதார முறைகேட்டில் ஈடுபட்டதாகவும் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மாவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# தேர்தல் அலுவலர்களுக்கு 3 கட்ட பயிற்சி வகுப்பு ...!




சென்னை, பிப். 20–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது. இதையடுத்து புதிய அரசு மேமாதம் பதவி ஏற்கும். தேர்தல் ஆணையத்தின் சார்பில், தேர்தல் அலுவலர்களுக்கு 3 கட்ட பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு உள்ளது. இதைத்தொடர்ந்து விரைவில், தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ள அலுவலர்களுக்கும் பயிற்சி வகுப்பு நடத்தப்பட உள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 2026–ல் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக மண்டல அலுவலர்கள் மற்றும் காவல் துறையினர் உள்ளிட்ட அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) க. கற்பகம் தலைமையில் ரிப்பன் கட்டிட வளாக கூட்டரங்கில் நடை பெற்றது.

இப்பணிகளில் ஈடுபடவுள்ள மண்டல அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், காவல்துறையினர், தேர்தல் பணி தொடர்புடைய இதர துறையினர் உள்ளிட்ட 1000 அலுவலர்களுக்கு காலை, மதியம் மற்றும் மாலை என மூன்று கட்டங்களாக பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

## சினிமா துளிகள்..!

### ரஜினி – கமல் இணைந்து நடிக்கும் படம் – ரெட் ஜெயண்ட் மூவிஸ்!




கமல் தயாரிப்பில் ரஜினி தனது 173–வது படத்தில் நடிக்க இருக்கிறார். இந்த படத்தை டான் பட இயக்குநரான சிபி சக்கரவர்த்தி இயக்க இருக்கிறார்.

இதையடுற்றது ரஜினி–கமல் இணைந்து புதிய படத்தில் நடிக்கவுள்ளனர். இருவரும் சேர்ந்து நடிக்கும் படத்தின் புரோமோ படப்பிடிப்பு நடைபெற்று முடிந்துள்ளது.

இப்படத்தை நெல்சன் திலீப்குமார் இயக்கவுள்ளார். இந்த படத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேரனும், துணை முதலமைச்சர் உதயநிதி மகனுமான இன்பநிதி தயாரிக்கவுள்ளார்.

படத்தில் ரஜினிக்கும், கமலுக்கும் சம்பளம் இல்லாமல் லாபத்தில் பங்கு என்ற முறையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இன்று இரவு 7.12 மணிக்கு ரஜினி – கமல் இணைந்து நடிக்கும் படத்தின் அறிவிப்பை ரெட் ஜெயண்ட் மூவிஸ் போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

தான் கமலின் பிறந்தநாளான 7 மற்றும் ரஜினியின் பிறந்தநாளான 12 என்பதை குறிக்கும் விதமாக 7.12 மணிக்கு இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த படத்தின் அடுத்த அறிவிப்பு நாளை மதியம் 12.07 மணிக்கு வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஜினி தற்போது ஜெயிலர்–2 டப்பிங் பணிகளில் இருக்கிறார். இந்த பணிகள் முடிவடைந்ததும் மார்ச் மாதத்தில் இருந்து சிபி சக்கரவர்த்தி இயக்கத்தில் ரஜினியின் 173–வது படப்பிடிப்பு தொடங்குகிறது.

### திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நடிகை திரிஷா சாமி தரிசனம்!



நடிகை திரிஷா திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சாமி தரிசனம் செய்துள்ளார். இது தொடர்பான புகைப்ப டங்களை திரிஷா தனது இன்ஸ்டா பக்கத்தில் பகி ர்ந்துள்ளார். அந்த பதிவில் "சிறந்த நாள் இது" என்று தெரிவித்தார்.

தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020